# பஞ்சபட்சி சாஸ்திரம்



பஞ்சபட்சி சாஸ்திரம் என்பது ஐந்து பட்சிகளை அடிப்படையாக கொண்டது. மேலும், இந்த சாஸ்திரத்தின் மூலம் நடைபெற இருக்கின்ற செயல்களைப் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

நாம் ஒரு செயலை செய்யும்பொழுது அதை நல்ல வேளையில் தொடங்கினால் அதன் பலன் நன்மையாகவே அமையும். அதைபோலவே பஞ்சபட்சி சாஸ்திரமும் நாம் செய்ய எண்ணும் செயலை ஒரு நல்ல வேளையில் தொடங்குவதற்கு உதவக்கூடியது. இதைக் கொண்டு நமது வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான பல சூழல்களையும் எளிதான முறையில் உருவாக்கி கொள்ள முடியும்.

பஞ்சபட்சி சாஸ்திரத்தை பற்றி சிவபெருமான் பார்வதிதேவிக்கு கூறியதாக புராணங்கள் கூறுகின்றன. அசுரர்களை அழிக்க முருகப்பெருமான் சென்றபோது பார்வதிதேவியார் தன் மகனான முருகனுக்கு இந்த சாஸ்திரத்தை பற்றி எடுத்துரைத்தார்.

இந்த சாஸ்திரத்தின் அடிப்படையில் முருகப்பெருமான் தமது திறனை வெளிப்படுத்தி அதில் வெற்றியும் கண்டார். பின்பு இந்தக் கலையை அகத்திய

முனிவருக்கு முருகப்பெருமான் கற்றுக்கொடுத்தார். அதன் வழியாக சித்தர்களும் கற்றுக்கொண்டனர்.

எந்தவொரு கலையாக இருந்தாலும் அதை நல்லமுறையில் பயன்படுத்துவது என்பது அவரவர்களின் கரங்களிலேயே அமைகின்றது. கலைகளை நல்லமுறையில் பயன்படுத்தும்பொழுது நம்முடைய ஈரேழு தலைமுறைகளும் நல்லமுறையில் வளர்ச்சி அடைகின்றன.

கற்ற கலையை தவறான எண்ணத்தோடு, தவறான பாதையில் பயன்படுத்தும்பொழுது நடைமுறையில் நாம் நல்லமுறையில் இருப்பதாக தோன்றினாலும் அடுத்தடுத்த சந்ததிகளுக்கு நாம் செய்த செயல்களினால் ஏற்பட்ட எண்ணங்களின் விளைவுகள் நிழல்போல பின் தொடரவே செய்கின்றன. ஆகவே பஞ்சபட்சி சாஸ்திரத்தை முடிந்த அளவு எவருக்கும் தீங்கிழைக்காத வகையில் பயன்படுத்த வேண்டும்.

ஒருவர் பஞ்சபட்சி சாஸ்திரத்தில் திறமை உடையவராக இருக்கும் பட்சத்தில் அவர் ஜோதிடத்தின் உதவிகளின்றி சுப தினங்கள் மற்றும் சுப நேரங்கள் போன்றவைகளை சரியான முறையில் அவர்களால் குறித்துக் கொடுக்க இயலும்.

'பட்சி அறிந்தவனை பகைத்துக் கொள்ளாதே' என்பது நமது முதுமக்களின் பழமொழியாகும். ஏனெனில் பஞ்சபட்சி சாஸ்திரத்தை அறிந்த ஒருவரை நாம் பகைத்துக் கொண்டால் அவர்கள் எதிரிகளான நம்மை எவ்விதத்தில் வெல்வார்கள் என்று நம்மால் எள்ளளவும் கணிக்க இயலாத ஒரு செயலாகும்.

ஒருவேளை நம்மீது பகை கொண்ட எதிரிகள் மறைமுகமான எதிர்ப்புகளை நம்மீது பயன்படுத்தும்பொழுது, பஞ்சபட்சி சாஸ்திரம் அறிந்திருந்து அதை நடைமுறையில் பயன்படுத்தி வெற்றி கண்டவராக இருக்கும் பட்சத்தில் அந்த மறைமுக எதிர்ப்புகளையும் நாம் எளிமையான முறையில் வெற்றி கொள்ள இயலும்.

## பஞ்சபட்சி ஓர் அறிமுகம்

இந்த பிரபஞ்சம் என்பது எண்ணற்ற மர்ம முடிச்சுகளை தன்னகத்தே கொண்டிருக்க கூடியதாகும். இன்றளவும் இந்த பிரபஞ்சத்தில் நாம் வாழும் இந்த உலகம் எப்படி உருவாகி இருக்கிறது என்பது பலவிதமான கோட்பாடுகளும், ஐயங்களும் இருக்கக்கூடிய ஒன்றாகும். இந்த பூமியில் பிறந்த அனைத்து உயிர்களும் விரும்பக்கூடிய ஒன்று இன்பம் என்பதாகும். எந்த உயிரினங்களும் தாம் வாழும் பொழுது துன்பத்தை விரும்பி ஏற்க மாட்டார்கள் அல்லது துன்பத்தை விரும்பமாட்டார்கள். துன்பம் என்பது வாழ்க்கையில் ஏற்படாமல் இருந்தால் இன்பம் என்பதை நம்மால் உணர முடிவதில்லை. வெயில் இருந்தால் மட்டும் தான் நிழலின் அருமையை உணர முடியம் அல்லவா?

அப்படியாகில் மனிதனாக பிறந்த அனைவரின் வாழ்க்கையில் முழுவதும் இன்பம் மட்டுமே நிகழக் கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியுமா? என்ற கேள்வி எல்லோரின் மனதிலும் தோன்றக்கூடும். இந்த ஒரு கேள்வியானது பலவிதமான ஆராய்ச்சிகளுக்கு மனிதனை உள்ளாக்கியது. இந்த ஆராய்ச்சியானது இவ்விடத்தில் மட்டுமில்லாது உலகில் பலவிதமான இடங்களிலும், பல வல்லுனர்களும் ஆராய்ச்சி தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபட்டனர். அவர்கள் அனைவரும் வெளிப்படுத்திய முடிவின் விதம் என்பது வேறுபட்டு இருந்தாலும் அவற்றின் உட்பொருள் என்பது இறையாண்மை என்பதாகும்.

அவர்களின் முடிவு என்பது இந்த உலகில் தோன்றிய உயிரினம் முழுவதுமாக இன்பம் அடையும் நிலை என்பது ஆன்மிகத்தின் மூலமாகவே இருக்கும் என்பதை கண்டறிந்தனர். இதில் நமது நாட்டை சேர்ந்த சித்தர்கள் முன்னோடியாக திகழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதில் ஐயமில்லை.

ஏன் சித்தர்கள் இதில் முன்னோடியாக இருக்கின்றார்கள்? என்ற கேள்வி அனைவரிடத்திலும் தோன்ற கூடியதாகும். ஏனெனில் சித்தர்கள் நமது உலகில்

நம்முடன் வாழ்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் வாழும் பொழுது இந்த உடல்நிலையைக் கொண்டு எப்பொழுதும் இன்பத்துடன் இருந்து இறை நிலையை அடைவதற்கான பலவிதமான சூட்சமங்களையும், வழிமுறைகளையும் நமக்காக வகுத்து கொடுத்திருக்கின்றனர்.

அவர்கள் ஒரே இடத்தில் பலவிதமான மக்களிடத்தில் சில நேரங்களில் இறைஞானம் கொண்டவர்களாகவும், அறிவியல் மற்றும் விஞ்ஞானம் எண்ணம் கொண்ட விஞ்ஞானிகளாகவும், இயற்கையை நன்றாக கூர்ந்து கவனிக்க கூடிய தன்மை கொண்டவர்களாகவும், உடல்நிலை மாற்றங்களை அறிந்து கொண்டு அதற்குத் தகுந்த மருந்துகளை தயாரிக்கக்கூடிய மருத்துவர்களாகவும், நமது மனதில் ஏற்படக்கூடிய ஐயங்களையும் உடனுக்குடன் நிவர்த்தி செய்யக்கூடிய மனோதத்துவ நிபுணர்களாகவும் திகழ்ந்து இருக்கின்றார்கள்.

அவர்கள் நம்முடைய சந்ததிகள் நன்மையுடன் வாழ்வதற்காக பல சூட்சமங்களை அவர்களுடைய பாடல்கள் மூலமாக நமக்கு அளித்துச் சென்ற நூல் "பஞ்சபட்சி" என்னும் சாஸ்திரமாகும். இந்த பஞ்சபட்சி சாஸ்திரம் என்பது ஒரு சில சித்தர்கள் மட்டும் அல்லாது எண்ணாயிரம் சித்தர்கள் நமக்கு விட்டுச் சென்ற அரிய பொக்கிஷமாகும்.

## உடலும் பஞ்சபூதமும்

உடலும் உடலில் இருக்கின்ற உயிரும் அந்த உயிரினுள் இருக்கின்ற உணர்வுகளும் பஞ்ச பூதங்களின் வெவ்வேறு அளவுகளில் கலந்து உருவாகிய ஒரு கலப்பு வடிவமாகும். அந்த கலப்பின் வடிவம் சமநிலையற்று இருக்கும் பொழுது அந்த உயிரினத்திற்கு துன்பம் என்ற நிலை உருவாக துவங்குகின்றது.

இந்த பஞ்ச பூத அளவுகளின் மாறுபாடுகளுக்கு ஏற்ப நம்மை மாற்றிக்கொள்வதன் மூலம் துன்பத்தை கடந்து இன்பத்துடன் வாழ முடியும். இவற்றை எல்லாம் நன்கு உணர்ந்த சித்தர்கள் இப்பஞ்ச பூத அதிர்வுகளில் மாறுபாடுகள் ஏற்பட காரணம் என்ன? என்பதை அறிய முற்பட்டு அதை அறிந்தும் கொண்டனர்.

அதாவது இந்த பூமியில் ஏற்படுகின்ற பஞ்ச பூத அதிர்வுகளின் மாற்றம் என்பது நவகோள்களின் செயல்பாடுகளிலும் 27 நட்சத்திர மண்டலங்களில் இருக்கக்கூடிய நட்சத்திர கோண நிலைகளையும் பொறுத்து அமைகின்றன என்பதை அறிந்துகொண்டனர்.

அதாவது இந்த நவகிரகங்கள் மற்றும் நட்சத்திரத்திலிருந்து வெளிப்படும் ஒளி கதிர்களும் மற்றும் பலவிதப்பட்ட கதிரி இயக்கங்களின் இணைப்புகள், நமது பூமியில் இருக்கக்கூடிய பஞ்ச பூத இணைப்புகளால் உருவாக்கப்பட்டு இருக்கக்கூடிய உயிரினங்களின் தனிப்பட்ட நிலைகளில் அதிர்வலைகளை ஏற்படுத்துகின்றன என்பதை நன்கு அறிந்து கொண்டனர் சித்தர்கள்.

இந்த அதிர்வுகள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்றும் இந்த பஞ்ச பூத பிணைப்புகளில் ஏற்படும் மாற்ற அதிர்வுகள் வளர்பிறை மற்றும்

தேய்பிறை காலங்களில் மாறுபடுகின்றன என்பதையும் அதுமட்டுமின்றி கிழமைகளிலும் மாறுபட்டு செயல்படுவதை அவர்கள் நன்கு அறிந்து கொண்டனர்.

## பஞ்சபட்சியில் பறவைகள் வருவதற்கான காரணம்?

வளர்பிறை மற்றும் தேய்பிறை காலங்களில் மட்டுமல்லாது வார கிழமைகளிலும் இந்த பஞ்ச பூதங்களில் ஏற்படக்கூடிய அதிர்வுகள் ஒரு குறிப்பிட்ட வரைமுறைக்குள் ஐந்து வகையான செயல்திறன்களுடன் செயல்படுவதை நமது சித்தர்கள் அறிந்துகொண்டனர்.

அதாவது ஒரு பூத தத்துவத்தின் அதிர்வு அதிகரிக்கும் பொழுது மற்ற நான்கு பூத தத்துவத்தில் செயல்பாடுகள் படிப்படியாக குறைவுபடும், செயல்பாடுகளில் மந்தநிலை ஏற்படும் மற்றும் ஒருசில செயல்பாடுகள் முற்றிலும் செயலற்ற நிலையில் இருப்பதையும் அவர்கள் தெளிவாக அறிந்து கொண்டனர்.

பஞ்ச பூத அதிர்வுகளில் ஏற்படக்கூடிய வெவ்வேறு நிலைகளின் தன்மைகளை அறிந்து கொள்ள அவைகளை ஐந்து பறவைகளோடு உருவகித்து, அவற்றோடு நமது வாழ்க்கையும் பின்னிப்பிணைந்து இருக்கும் வகையில் நிர்வகித்து கொடுத்தனர் சித்தர்கள்.

இந்தப் பஞ்ச பூத தன்மைகள் ஏற்படும் அதிர்வுகளின் வெவ்வேறு மாற்றங்களின் நிலைக்கு ஏற்ப செயல்படும் செயல்பாடுகளுக்கு "தொழில்கள்" என்று கூறினார்கள்.

இந்த ஐந்து பறவைகளும் பஞ்ச பூத தன்மைகளில் ஏற்படும் பூத அதிர்வுகளின் மாற்றங்களை தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டு அதற்கு தகுந்தாற் போல பகல்-இரவு, கிழமைகள், வளர்பிறை மற்றும் தேய்பிறை காலங்களில்

வெவ்வேறு விதமான செயல்பாடுகளில் மாறிமாறி செயல்படுகின்றன என்பதையும் அவற்றின் செயல்திறனையும் தெளிவாக அறிந்து கொண்டனர் சித்தர்கள். பலவிதமான கணித கணிப்புகளும் செயல்பாடுகளும் பஞ்சபூத அதிர்வுகளின் மாற்றத்தையும் தன்னகத்தே அடக்கி கொண்டிருக்கக்கூடிய ஒரு உன்னதமான நூல்தான் "ஐம்புள் நூல்" அல்லது "பஞ்சபட்சி" சாஸ்திரமாகும்

ஐம்பூதங்களில் ஏற்படும் அதிர்வுகளின் மாற்றங்களை எடுத்துக்கொண்டு இந்த ஐந்து பறவைகளும் செயல்படும் தொழில்கள் அதனுடைய நிலைக்கு ஏற்ப கீழ்கண்டவாறு நமது சித்தர்கள் பெயர் சூட்டினார்கள். அவை

முற்றிலுமாக செயல் இழந்த நிலை - சாவு

உயிரோட்டம் இருந்து செயல்படாத நிலை - தூக்கம் அல்லது துயில்

உயிரோட்டத்துடன் இருந்து செயல்படும் நிலை - நடை

உயிரோட்டத்துடன் இருந்து மென்மேலும் செயல்படும் நிலை - ஊண்

உயிரோட்டத்துடன் இருந்து முழுமையான சக்தியுடன் செயல்படும் நிலை - அரசு